**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6631

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.04.2023

Accepted: 25.06..2023

Published: 01.07.2023

Citation:
Sathya, M. "Eyini : A Study of a Poet Name." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 1, 2023, pp. 85–91.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6631

*Corresponding Author:
sathyamurugan0507@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Eyini : A Study of a Poet Name

**M. Sathya**
*Ph.D., Researcher, Department of Tamil Literature*
*Chennai University, Chennai, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0000-8894-1582*

## Abstract

One of the most important concepts expressed in the Sangha literature is 'five land' division. If we take this five-land division as 'evolutionary development', it seems that people must have migrated from Kurinji to Mullai to Marutham. So the question arises whether the leader who was a hunter in Kurinji becomes an Ayan in Mulla. Therefore, it cannot be said with certainty that he is the one who belongs to this land. The purpose of this article is to examine this with the names of three feminist poets. The fact that their names unite the two Lands that shows the land division was divided by the later poets according to their convenience.

**Key Words:** Kuramagal, Peaimagal, Eyini, Kalavealvi, Thinai Mayakkam.

**References**

1. Sathya, M. 2022. *Eyini in Sangam Literature*, Female authors and female writing in the Tamil Tradition, Parithy Publications, Thirupattur.

# எயினி : புலவர் பெயர் ஆய்வு

*மு. சத்தியா*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச்சுருக்கம்***
*சங்க இலக்கியம் வெளிப்படுத்தும் மிக முக்கியமான கருத்தாக்கங்களில் ஐந்திணைப் பாகுபாடும் ஒன்று. இந்த ஐந்திணைப் பாகுபாட்டைப் "பரிணாம வளர்ச்சி" யாகப் எடுத்துக் கொண்டுப் பார்த்தால் குறிஞ்சியில் இருந்து முல்லையில் இருந்து மருதம் என்று மக்கள் இடம் பெயர்ந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. அப்படியானால் குறிஞ்சியில் வேட்டுவனாக இருந்த தலைவன் முல்லையில் ஆயனாக மாறுகிறானா என்ற கேள்வி தோன்றுகிறது. ஆகையால், இந்நிலத்திற்குரியவர் இவர் தான் என்று உறுதியாகக் கூற முடியாது. இதனை, மூன்று பெண்பாற் புலவர்களின் பெயர்களைக் கொண்டு ஆராய்வுதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவர்களின் பெயர்கள் இரண்டு திணைகளை ஒன்றாக்குவதால் நிலப்பாகுபாடு என்பது பிற்கால புலவர்களால் தங்களின் வசதிக்கேற்ப பிரிக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *குறமகள், பேய்மகள், எயினி, களவேள்வி, திணை மயக்கம்*

## முன்னுரை

சங்க இலக்கியத்தை வாசிக்கும் போது இந்தத் திணைக்குரியவை இவைகளே என்ற திணைக் கோட்பாட்டின் நினைவோடு வாசிப்பதால் அதில் உள்ள கருத்தோட்டங்கள் பெரிதும் வெளிப்படுவதில்லை. மேலும், வேறுபாடுகள் ஏற்படின் அதனைத் திணை மயக்கம் என்று ஏற்றுக்கொள்ளும் வழக்கமே உள்ளது. ஆனால், அவை திணை மயக்கம் என்றில்லாமல் அந்தந்த நிலப்பகுதிகளில் இயங்கியவையாக இருக்க வாய்ப்புண்டு என்ற நோக்கத்தோடு வாசித்தல் புதிய ஆய்வுச் சிக்கல்களை உருவாக்க முடியும். இத்திணைக்குரிய மக்கள் இவர்களே என்றாற்போல் இல்லாமல் ஒரே நிலப் பகுதியில் வெவ்வேறு மக்கள் குழுக்கள் வாழ்ந்திருக்கலாம். இதனை,

**குறமகள் இளவெயினி (புறம். 157)**
**குறமகள் குறியெயினி (அகம். 357)**
**பேய்மகள் இளவெயினி (புறம். 11)**

என்ற பெண்பாற் புலவர்களின் பெயர்களைக் கொண்டு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## எயினி

குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி ஆகிய இருவர் புறத்திலும்; குறமகள் குறியெயினி அகத்திலும் ஒவ்வொரு செய்யுள் இயற்றியுள்ளனர். இவர்களின் பெயரில் இடம்பெற்றுள்ள "எயினி" என்ற சொல் மூவருக்கும் பொதுவாக அமைந்துள்ளது. "எயின்" என்ற வேர்ச்சொல்லைக் கொண்டே எயினன், எயினி என்ற சொற்கள் பிறக்கின்றன. "எயின்" என்பதை வேட்டுவ சாதி என்றும் "எயினன்" என்பதை வேடன் என்றும் அகராதிகள் பொருள் தருகின்றன. இதனால் எயினி என்பதற்கு வேடர்குலப் பெண் என்று பொருள் எடுத்துக் கொள்ளலாம். குறிஞ்சித் திணை பற்றியக் குறிப்புகளை விவரிக்கும் தொல்காப்பியம், பாலைத் திணைக்குரிய கருப்பொருள்கள் பற்றி

எந்த ஒரு குறிப்பும் தரவில்லை. எயினர், எயிற்றியர், எயிற்றி முதலானோர் பாலை நில மக்கள் என்று நம்பியகப் பொருள் உறுதிபடக் கூறுகிறது.

**"கன்னி விடலை காளை மீளி**
**இன்னகை எயிற்றி எயினர் எயிற்றியர்"**
**(அகப்பொருள் விளக்கம். 21)**

இதைக் கொண்டு எயினி பாலைத் திணையைச் சார்ந்த பெண், இவர்கள் "பகல் சூறை ஆடல்" செய்து வாழ்ந்தனர் என்று எடுத்துக்கொண்டாலும் நம்பியகப் பொருள் பிற்காலத்தைச் சேர்ந்தது என்பது நினையத்தக்கது.

மேலும், சங்க இலக்கியத்தில் எயினர், எயிற்றியர் ஆகோள் பூசலிலோ வழிப்பறியிலோ ஈடுபட்டதாக செய்திகள் இல்லை.

**"எயினர் தந்த எய்ம்மான் எறிதசை**
**பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை"**
**(புறம்.177:13,14)**

**"முளமா வல்சி எயினர் தங்கை**
**இளமா எயிற்றிக்கு நின்னிலை அறிய"**
**(ஐங். 364: 1,2)**

என்று பன்றி, மான், முள்ளம்பன்றி முதலியவற்றை வேட்டையாடுபவர்களாகக் காட்டப்படுவதால் எயினர், எயிற்றியர் வேடர்களாகவே தங்கள் வாழ்க்கையை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

**இளம், குறி**

குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி என்ற பெயர்களில் உள்ள இளவெயினி என்னும் சொல்லை இளம்+எயினி என்று பிரித்து 'இளம்" என்பதை இளமை என்பதாகவும் 'எயினி" என்பதைப் புலவரின் இயற்பெயராகவும் கருத வாய்ப்புண்டு. இளம் என்று கூறுவதால் புலவர் வயதில் சிறியவர் என்பது தெரிய வருகிறது.

குறமகள் குறியெயினி என்பதில் உள்ள "குறி" என்பதற்கு அகராதிகள் அடையாளம், இலக்கு, குறியிடம், நோக்கம், நிமித்தம், சபை, இலக்கணம், கோடு என பல பொருள் தருகின்றன.

குறியெயினி குறிப்பு என்ற சொல்லைத் தன் பாட்டில் பயன்படுத்துவதால் குறியெயினி எனப்பட்டார் என்பது அறிஞர்கள் கருத்து,

**"நின் குறிப்பு எவனோ தோழி என் குறிப்பு" என்று பாடியிருத்தலின் குறியெயினி எனப்பட்டார் போலும். அன்றிக் குறி கூறுவதில் வல்லள் போலும்"**

**(நற்றிணை மூலமும் உரையும். ப.ஃதுதுதி)**

என்று உ.வே.சா. குறமகள் குறியெயினியை விரிச்சியுரைக்கும் பெண்ணாகச் சித்தரிக்கிறார். மேலும், குறமகள் இளவெயினியும், குறமகள் குறியெயினியும் ஒருவரே என்றும் இளமையில் இளவெயினி என்றும், பிற்காலத்தில் குறியெயினி என்றும் வழங்கப்பட்டார் என்பது புலவர் கா.கோவிந்தன் முன்வைக்கும் கருத்தாகும்.

**"ஏறைக் கோனைப் பாடிய குறமகள் இளவெயினியாரே இவர்; இளமையில் ஏறைக்கோனைப் பாடியவராதலின் அங்கே அவர் இளவெயினி எனப்பட்டர் என்றும் தன் வாழ்நாளில் பிற்காலத்தே பாடிய நற்றிணைச் செய்யுளில் 'நின் குறிப்பு எவனோ தோழி என் குறிப்பு" என்ற முதலடியில் குறிப்பு என்ற சொல்லை அடுக்கிவைத்துப் பாடிய காரணத்தால் இவர் குறிப்பெயினி எனப்பட்டார்; ஏடு எழுதினோர் அதை குறிஎயினி என மாற்றியிருத்தலும் கூடும்"**

**(சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை. ப.47)**

என்று புலவர் கா. கோவிந்தன் உ.வே.சா. - வின் கருத்திற்கும் வலுசேர்க்கிறார்.

**இருதிணையின் பெயர்கள்**

குறமகள் இளவெயினி குறமகள் குறியெயினி, புலவர்களின் பெயர்கள் குறவர் இனத்தையும் எயினர் இனத்தையும் ஒன்றிணைப்பதாகவுள்ளது. குறவரும் எயினரும் ஓர் இடத்தில் ஒரே நிலப்பகுதியில் வாழ்ந்திருத்தல் வேண்டும். அதாவது இரண்டு வேறு இனக்குழுக்கள் ஒரே திணையில் ஒன்றாக புழங்கியமை இப்பெயர்கள் மூலம் தெளிவாகிறது.

> **"வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், எளிய வேளாண்மை ஆகிய மூன்று வகையான உற்பத்தி முறைகள் குறிஞ்சி நிலம் சார்ந்தவையாக அமைகின்றன. வேடர் வேட்டைத் தொழிலையும் குறவர் வேளாண்மையையும் முதன்மையாகக் கொண்டுள்ளனர்"**
>
> ***(இலக்கிய இனவரைவியல். ப.55)***

என்று ஞா.ஸ்டிபன் குறிஞ்சித் திணையின் உணவு உற்பத்தி முறையை விளக்குகிறார். பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில், எயினர்களை வேடர்களாகவும் குறவர்களை எளிய வேளாண்மையில் ஈடுபட்டவர்களாகவும் எடுத்துக்கொண்டால் வேட்டைச் சமூகமும் வேளாண் சமூகமும் ஒன்றாக இயங்கியமை வெளிப்படுகிறது. குறவரும் எயினரும் ஒரே இடத்தில் வாழ்ந்த வெவ்வேறு இனக்குழுக்களாகும்.

இதன் காரணமாகத்தான் இரண்டு வேறு இனக்குழுக்களின் பெயரையும் தன் பெயராக இந்தப் 'பாண் மகள்" வைத்திருக்கிறாள். இப்பெண்பாற் புலவரைப் பாண் மகள் என்றதன் காரணம் இவர் 'ஏறைக் கோன்" என்ற இனக்குழுத் தலைவனைப் பாடிமையால் தான்.

இதனைப்போல், வாசிப்பு வசதிக்காகத் திணைவாரியாகப் பிரித்து வைத்திருக்கும் பல இனக்குழுக்கள் ஒன்றாக ஒரு நிலப்பகுதியில் வாழ்ந்திருக்கவும் வாய்ப்புண்டு.

**பேய்மகள்**

பேய்மகள் இளவெயினி, இப்பெண்பாற் புலவருக்குப் பேய்மகள் என்ற பெயர் வந்த காரணம் பற்றி அறிஞர்கள் கூறும் கருத்துகள் சில:

> **"பேய்மகள் கட்புலனாகாத வடிவுடையானதலால், கட்புலனாமாறு பெண்வடிவு கொண்டு இளவெயினியென்னும் பெயருடன் நின்று இதனைப் பாடினானென்று இவ்வுரைகாரர் காலத்தே சிலர் கூறியிருக்கின்றனர். போர்களத்துப் பிணந்தின்னும் பேய்மகளிரை வியந்து விரியப் பாடிய சிறப்பால், இளவெயினியார்க்குப் பேய்மகளென்பது சிறப்புப்பெயரா யமைந்ததாகல் வேண்டும். இளவெயினியென்பது இவர் இயற்பெயர். குறமகள் இளவெயினி யென்பார் ஒருவர் சான்றோர் குழாத்துட் காணப்படுதலின், அவரின் வேறுபடுத்த இவரை இவ்வாறு சிறப்பித்தனர்" *(புறநானூறு மூலமும் உரையும். ப.31)***

என்று ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை கூறுகிறார். இங்குப் பேய்மகள் என்பவள் கண்ணிற்குப் புலப்படாதவள் என்றும்; பாலைப் பாடிய பொருங்கடுங்கோவைப் பாடும் போது கண்ணிற்குப் புலப்படுமாறு தோன்றினார் என்றும்; போர்களத்தில் பிணந்தின்னும் பேய்மகளிரைப் பாடியதால் பேய்மகள் எனப்பட்டார் என்றும்; குறமகள் இளவெயினியில் இருந்து பிரித்துக்காட்டுதல் பொருட்டு இப்பெயர் பெற்றார் என்றும் கூறுப்படுகிறது.

> **"தேவராட்டி, அணங்காட்டி என்றாற்போலத், தம் மந்திரவலியாற் பேயைத் தமக்குரியதாகப் பெற்ற மகள் இவர் ஆவர்; அது பற்றிக் கூறப்பட்டதா மென்க. இதனால் இவர் பேயையும் ஏவிக் காரியங் கொள்ள வல்லர் என்பதறிக" *(நல்லிசைப் புலமை மெல்லியலார்கள். ப.85)***

என்று இரா. இராகவையங்கார் கருதுகிறார்.

**"பேய்மகள் என்பது தெய்வமேறியாடும் தேவராட்டி அல்லது பூசாரிச்சியைக் குறிக்கும்; தெய்வ முற்றாற்போல் வந்து நின்று குறி கூறுவது இவர்கள் தொழில்; அத்தகைய தேவராட்டிகளுள் இளவெயினியும் ஒருவர்; ஆகவே, அவர் பேய்மகள் எனப்பட்டார்"**

***(சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை. ப.74)***

என்கிறார் புலவர் கா. கோவிந்தன்.

இவர்கள் கருத்தில் இருந்து பெறக் கூடிய செய்தி, பேய்மகள் ஊன் உடம்போடு வாழ்ந்த பெண்ணாவாள்; தெய்வமேறி குறி கூறும் சக்தி பெற்ற தேவராட்டி; தன் மந்திர சக்தியால் பேயைக் கட்டுப்படுத்தி ஏவல் செய்பவள் என்பவையாகும். மேற்சுட்டியவற்றில் சில உரையாசிரியர்களால் புனையப்பட்டவையாக இருந்தாலும் பேய்மகள் பற்றி கிடைக்கக் கூடிய செய்திகள் இவைகளேயாகும்.

**போர்க்களத்தில் பேய்மகள்**

**"வில்லே ருழவினின் னல்லிசை யுள்ளி"**

***(புறம். 371:14)***

**"புலவுக்களம்பொலியவேட்டோய்நின்"**

***(புறம். 372: 14)***

**"அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய"**

***(புறம். 26: 11)***

இங்கு போர்க்களத்தில் வேள்வி நடந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், உழவும் போரும் ஒன்றோடு ஒன்று ஒப்புமைப்படுத்தப்படுகிறது. தொல்காப்பியரும்,

**"ஏரோர் களவழி அன்றிக் களவழித்**
**தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்"**

***(தொல். புறத்.17:4,5)***

என்று ஏர்க்களத்தில் நடைபெறும் சடங்கு போன்ற வேள்வியோடு போர்க்களத்தில் நடத்தப்பெறும்வேள்வியைத் தொடர்புப்படுத்திக் கூறுகிறார். இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

**"வேளாண்மாக்கள் விளையுட்காலத்துக் களத்துச் செய்யுஞ் செய்கைகளைத் தேரோர் வந்த திணைப்பொருநர் முதலியோர் போர்க்களத்தே தோற்றுவித்த வென்றியன்றிக் களவழிச் செய்கைகளை மாறாது தேரேறி வந்த புலவர் தோற்றுவித்தவென்றியானும்"**

**(தொல்காப்பியம் உரைவளக் கோவை. ப. 200)**

என்று குறிப்பிடுகிறார். மருத நிலத்தை மையமாகக் கொண்டு உருவான வேந்தர் மரபு, உழவை மையப்பொருளாகக் கொண்ட ஏர்க்களத்தில் அறுவடையின் பின் கடவுட்பலி கொடுப்பது போன்ற சடங்குகளையொட்டிப் போர்க்கள வேள்வி தோன்றியிருத்தல் வேண்டும். உயர்வு பெற்று இருக்கும் ஒன்றோடு மற்றொன்றை ஒப்பிடுதல் வழக்கமாகையால், போரினை உழவோடு ஒப்பிடுவதின் வழி உழவு அடைந்திருந்த உயர்வை அறிய முடிகிறது.

போரில் வெற்றி பெற்ற மன்னன் தன் படையில் உயிரிழந்த வீரர்களின் பொருட்டுப் போர்க்களத்தில் சில சடங்குகளைச் செய்திருக்கிறான். இந்த சடங்கு முறைமைகளைத் தொடர்ந்து செய்வதினால் தனக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வேள்வி போர்க்களத்தில் நடைப்பெற்றுள்ளது. அதாவது, வேளாண் நிலத்தில் வளமைக்காகக் கடவுட்பலி முதலான சடங்குகள் செய்யப்பட்டது போலவே போர்களத்திலும் சடங்குச் செய்யப்பட்டுள்ளது.

இதுவே போர்க்களவேள்வி ஆகும். இந்த போர்க்கள வேள்வியில் பேய்மகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். வேந்தன் தன்பகை நாட்டு வீரர்களின் உடலைப் பேய்மகள் உண்ணுமாறு அழைக்கிறான். பேய்மகள் போர்க்களத்தில் பிணந்தின்னும் சடங்கினைச் செய்திருக்கிறாள்.

இதற்குச் சங்க இலக்கியத்தில் நேரடி சான்றுகள் இல்லை என்றபோதும்,

**"பிணத்தின் குடரையும் கொழுப்பையும் தமது உடலின் மீது போட்டுக் கொண்டு திரிவர். போரில் வெற்றிகிடைப்பதற்காக இச்சடங்கு செய்யப்படுகின்றது. செத்த மனிதனது கொழுப்புடன் அவன் சத்தியும் தமக்குக் கிடைப்பதாக இவர்கள் நம்புகின்றனர்"**

***(பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். ப.56)***

என்று க. கைலாசபதி குறிப்பிடும் ஆஸ்திரேலியப் பழங்குடிக்களிடையே உள்ள வாழ்வியல் வழக்கமானது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு பேய்மகள் இளவெயினி, தாய்தெய்வ வழிபாட்டின் போது சுடுகாட்டில், போர்க்களங்களில் பிணந்தின்னும் இளம் வேடர்குலத் தேவராட்டியாக இருத்தல் தெரிய வருகிறது.

### பேய்மகள் யார் ?

கருவுற்றுக் குழந்தை பெறும் தன்மை பெண்ணிற்கு இயற்கையாகவே இருப்பதால் பெண்களுக்கு மந்திர சக்தி அதிகம் என்று மக்கள் நம்பினர். இதனால் தன் சக்தியை அதிகரித்துக் கொள்ள விரும்பிய பெண்கள் பிணந்தின்னும் வழக்கத்தை மேற்கொள்ள முற்பட்டனர். இதற்கான சான்றுகள் சங்க இலக்கியத்தில் இல்லை என்றபோதும் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தோனீசியா, மடகஸ்கர் முதலிய நாடுகளில் வாழ்ந்த இனக்குழுகளிடையே பிணந்தின்னும் வழக்கம் இருந்ததை க.கைலாசபதி நிறுவுகிறார். இவர்கள் பிணங்களின் உறுப்புகளில் இருந்து தாயத்து செய்தல், மனித பிணந்தைத் தின்பதால் பிறர் கண்ணிற்குத் தோன்றாத உணர்வைப் பெறுதல், மாந்திரீகங்கள் கற்றல், ஆவிகளைத் தன் வசப்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடுவதாகக் க. கைலாசபதி குறிப்பிடுகிறார்

*(பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். பக். 55-57).*

பேய்மகள் சுடுகாட்டில் பிணங்களைத் தின்று, கொற்றவையை வணங்குபவள் என்பதால் தாய்த் தெய்வ வழிபாட்டில் முக்கிய இடம் பேய்மகளுக்கு அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இதனைக் க.கைலாசபதி,

**"பேய்மகளிர் உண்மையான மகளிரே. ஆனால் பெண் தெய்வ வழிபாட்டிற்காகப் பிணந்தின்னிகளாகவும் இருந்தனர். அந்த வழக்கம் பின்னாளிலே சிவ வழிபாட்டுடன் கலந்தது *(பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்." ப.68)***

என்கிறார்.

ஆகையால் இங்கு பேய்மகள் இளவெயினி என்பார் சுடுகாட்டில், போர்களத்தில் பிணந்தின்னும் இளம் வேடர் இனப் பெண்ணாவாள். இதனால் ஒவ்வொரு நிலப்பகுதியில் வாழ்ந்த வெவ்வேறு குழுவிலும் பேய்மகள் போன்ற பிரிவினர்களைக் கொண்டு மக்கள் வாழ்ந்தமை இதன் வழி தெரியவருகிறது.

### முடிவுரை

இதனால் வெவ்வேறு இனக்குழுக்கள் ஒரு திணைக்குள் இயங்கியமை குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி, பேய்மகள் இளவெயினி ஆகிய மூன்று பெண்பாற் புலவர்களின் பெயர்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு குறவர், எயினர் இனமக்கள் ஒரே நிலப்பகுதியில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பதையும் பேய்மகள் என்பவள் ஊன் உடம்போடு உண்மையில் வாழ்ந்தவள்; போர்க்கள காட்சிக்காகப் புனையப்பட்டவள் இல்லை என்பதையும் ஒவ்வொரு இனக்குழுவும் பேய்மகள் போல் பல பிரிவுகள் கொண்டு வாழ்ந்திருந்தமையும் இக்கட்டுரையில் நிறுவப்பட்டுள்ளது.

**துணைநூற் பட்டியல்**

1. அகநானூறு மணிமிடை பவளம், ந.மு.வேங்கடசாமி நாட்டார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2007.
2. ஐங்குறுநூறு மூலமும் உரையும், பொ.வே.சோமசுந்தரனார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2009.
3. குறுந்தொகை மூலமும் உரையும், மு. சண்முகம் பிள்ளை (பதி.ஆ), தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.
4. நற்றிணை மூலமும் உரையும், ஏ. வேங்கடராமன் (பதி.ஆ), டாக்டர் உ.வே.சாமிநாதரையர் நூல்நிலையம், சென்னை,1997.
5. பதிற்றுப்பத்து, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2007.
6. புறநானூறு மூலமும் உரையும், ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2007.

**துணைமைச் சான்றாதாரங்கள்**

1. இராகவையங்கார். இரா. 1933. நல்லிசைப் *புலமை மெல்லியலார்கள்,* மயிலை தமிழ்க்கடல் ஆபீஸ்.
2. கைலாசபதி, க. 1999. *பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்*, சென்னை, குமரன் பதிப்பகம்.
3. கோவிந்தன். கா. 1956. *சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை*, சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. சஞ்சீவி, ந. 2010. *சங்க இலக்கிய ஆய்வும் அட்டவணையும்*, காவ்யா.
5. சிவத்தம்பி, கா. 2019. *பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
6. சுப்பிரமணியன். ச.வே. 2009. *தொல்காப்பியம் உரைவளக் கோவை,* சென்னை மணிவாசகர் பதிப்பகம், (முதற்பதிப்பு).
7. திருஞானசம்பந்தர். ச., (உ.ஆ), நம்பியகப் பொருள், திருவையாறு, கதிர் பதிப்பகம்.
8. வெள்ளை வாரணன். க. 1983. தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம், மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், (முதற்பதிப்பு)
9. வேங்கடசாமி. ந.மு., 2009. *ஐம்பெருங்காப்பியங்கள் - 1 (சிலப்பதிகாரம்)*, இளங்கனி பதிப்பகம், சென்னை, (முதற்பதிப்பு).
10. ஸ்டிபன். ஞா. 2021. *இலக்கிய இனவரைவியல்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

**அடைவு அகராதிகள்**

1. சங்க இலக்கியச் சொல்லடைவு, பெ. மாதையன் (தொ.ஆ), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007 (முதற்பதிப்பு).
2. செந்தமிழ்ச் சொல்லகராதி, கந்தையா. ந.சி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1999.
3. தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon), எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.ஆ), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982 (முதற்பதிப்பு).